### கீழ்பென்னாத்தூர் தொகுதியில் — கிராமம் கிராமமாக

# கு.பிச்சாண்டி வாக்காளர்களுக்கு நன்றி கூறி சுற்றுப்பயணம்!




கீழ்பென்னாத்தூர், மே 15-

கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளரும் முன்னாள் சட்டபேரவை துணை சபாநாயகருமான கு.பிச்சாண்டி வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

கழகத் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான; மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரையின்படி கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதி கீழ்பென்னாத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட சிறுநாத்தூர், நாரியமங்கலம், கல்பூண்டி, இராயம்பேட்டை, கரிக்கலாம்பாடி, வேடநத்தம், கணியாம்பூண்டி, கொளத்தூர், சாணிப்பூண்டி, காட்டுமலையனூர், அரும்பாக்கம், கலிங்கலேரி, சு.பொலக்குணம் ஆகிய ஊராட்சிகளில் உதயசூரியன் சின்னத்தில் தனக்கு வாக்களித்த மக்களுக்கு கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளராக போட்டியிட்ட முன்னாள் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி நன்றி தெரிவித்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் ஆராஞ்சி ஆறுமுகம், இரா.ராஜேந்திரன் நகர செயலாளர் சி.கே.அன்பு, மாவட்டப் பிரதிநிதி தேவேந்திரன், மா.குப்புசாமி, ஒன்றிய துணை செயலாளர் சிவக்குமார், இளம்பரிதி ஒன்றிய ஆராஞ்சி சேகர், இளைஞர் அணி அமைப்பாளர் சதிஷ்குமார், சூரியா, துணை அமைப்பாளர் காட்டுமலையனூ}ர் மணிகண்டன் ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள் கழக உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

### கொசு உற்பத்தியை தடுக்க வேண்டும்!

# பருவநிலை மாற்றத்தால் டெங்கு அபாயம்!

## பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தல்!

சென்னை, மே 15-

தமிழகத்தில் பருவநிலை மாற்றத்தால் டெங்கு பாதிப்பு அதிகரிக்கும் அபாயம் உள்ளதால், கொசு உற்பத்தியை தடுக்க அதிகாரிகளுக்கு பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தி உள்ளது. தமிழகத்தில் கோடை வெயில் தொடங்குவதற்கு முன்பே கடந்த ஏப்ரல் முதல் வாரத்திலேயே வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. தொடர்ந்து நாளுக்குநாள் வெயில் அதிகரித்து வந்த நிலையில் கடந்த 4ம் தேதி கத்திரி வெயில் காலம் தொடங்கியதால், இந்த நிலை இன்னும் மோசமானது. இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு வளிமண்டல காற்று சுழற்சி காரணமாக தமிழகத்தில் பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்தது. இதனால் வெப்பம் குறைந்து மக்கள் மகிழ்ச்சி டைந்தனர்.

இந்நிலையில் தமிழகத்தில் கடந்த வாரம் பெய்த மழை மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வானிலை மாற்றங்கள், டெங்கு கொசு உற்பத்தியை அதிகரிக்கும் அபாயம் உள்ளது. பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் அதீத வெப்பநிலை, சீரற்ற மழைப்பொழிவு மற்றும் அசாதாரண வானிலை மாற்றங்கள் ஆகியவை ஏடிஸ் வகை கொசுக்களின் பெருக்கத்துக்கு உகந்த சூழலை உருவாக்குகின்றன. இதனால் டெங்கு காய்ச்சல் பரவல் அபாயம் அதிகரித்துள்ள நிலையில், பொது சுகாதாரத் துறை மாவட்ட நிர்வாகங்களுக்கு விரிவான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. அதில், தமிழகத்தில் நகர்ப்புறங்களில் உள்ள தேங்கிய நீர், குப்பை மற்றும் சுகாதாரமற்ற சூழல்கள் கொசுகள் உருவாக இடமளிக்கிறது.

**தி.மு.க. ஆட்சியில் பாதிப்பு விகிதம் குறைந்தது!**

அதனால் வீடுகள், தொழில்நிறுவனங்கள், கட்டுமான தளங்கள், பள்ளிகள் மற்றும் பொது இடங்களில் கொசு உற்பத்திக்கு இடமளிக்காமல் பராமரிப்பது மிக முக்கியம். தண்ணீர் தொட்டிகள், குளிர்பதன பெட்டிகள், டயர்கள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவற்றில் தேங்கும் நீரை வாரம் ஒருமுறை காலி செய்து சுத்தப்படுத்த வேண்டும். உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சுகாதார துறையின் ஒருங்கிணைந்த முயற்சியால் கடந்த ஆண்டு தி.மு.க. ஆட்சியில் பாதிப்பு விகிதமும் இறப்பு எண்ணிக்கையும் கணிசமாக குறைந்தது. இதை தக்கவைக்கவும், மேலும் குறைக்கவும் தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென அதிகாரிகளுக்கு பொது சுகாதாரத் துறை வலியுறுத்தி உள்ளனர்.

இது தொடர்பாக பொது சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிவுறுத்தல்: தமிழகத்தில் பெய்த மழை காரணமாக தண்ணீர் தேங்கி டெங்கு காய்ச்சலைப் பரப்பும் ஏடிஸ் வகை கொசுக்கள் உற்பத்திக்கு வழிவகுக்கின்றன. வழக்கமாக உள்ள கண்காணிப்பு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகளில் கூடுதல் சவாலை அளிக்கும் வகையில் இந்தக் காரணிகள் அமைந்துள்ளன. டெங்கு பாதிப்புகள் குறித்த தகவல்களை சுகாதார இணையப் பக்கத்தில் உடனுக்குடன் பதிவேற்ற வேண்டும். இதனால் நிகழ்நேர தரவுகள் கிடைத்து, பரவலை உடனடியாகக் கட்டுப்படுத்த முடியும்.

**பரிசோதனை உபகரணங்கள் இருப்பு வைத்திருக்க வேண்டும்!**

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு டெங்கு காய்ச்சல் பாதிப்பு தமிழகத்தில் தீவிரமாக இருந்தது. உள்ளாட்சி அமைப்புகள், சுகாதாரத் துறையின் ஒருங்கிணைந்த செயல்பாடுகளின் காரணமாக கடந்த ஆண்டு பாதிப்பு விகிதமும், இறப்பு எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்தது.

நோய் பரப்பும் பூச்சிகள், கொசுக்களைக் கண்காணித்து அவற்றின் உற்பத்தியை குறைக்க நடவடிக்கை எடுப்பது முக்கியம். அரசு மருத்துவமனைகளில் டெங்கு பரிசோதனைகளை கட்டணமில்லாமல் மேற்கொள்வதற்கான கட்டமைப்பு தயார் நிலையில் இருத்தல் வேண்டும். குறிப்பாக பரிசோதனை உபகரணங்கள் போதிய எண்ணிக்கையில் இருப்பு வைத்திருக்க வேண்டும். கொசு உற்பத்திக்கு இடமளிக்காத வகையில் வீடுகள், தொழில்நிறுவன வளாகங்களைப் பராமரிப்பது முக்கியம். நோய் சார்ந்த சூழல்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

# எஸ்.ஐ.ஆர். மூலம் நீக்கப்பட்டவர்கள் அரசு நலத் திட்டங்களை பெற முடியாது!

## மேற்கு வங்கம், பிஹார் மாநில அரசுகள் அறிவிப்பு!

கொல்கத்தா/பாட்னா, மே 15–

மேற்கு வங்கத்தில் முதல்வர் சுவேந்து அதிகாரி தலைமையில் புதிய பா.ஜ.க. அரசு கடந்த சனிக்கிழமை பதவியேற்றது. இந்த அரசின் முதல் அமைச்சரவைக் கூட்டம் கடந்த திங்கள் கிழமை நடை பெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு பிறகு செய்தியாளர்களிடம் முதல்வர் சுவேந்து அதிகாரி கூறுகையில், “அரசின் அனைத்து சமூக நலத்திட்டங்களும் அவை 10 ஆண்டுக்கு முன் அல்லது 30 ஆண்டுக்கு முன் தொடங்கப்பட்டவையாக இருந்தாலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். எனினும், இறந்தவர்கள், சட்டவிரோதமாக ஊடுருவியவர்கள் அல்லது இந்தியர் அல்லாத எவரும் மேற்கு வங்க மக்களுக்கான நலத் திட்டங்களை பெற அனுமதிக்கப்பட மாட்டார்கள்” என்றார்.

இந்நிலையில் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கையின் கீழ் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்கள் அரசு நலத்திட்ட உதவிகளை பெற முடியாது என்று மேற்கு வங்க அரசு அறிவித்துள்ளது. எனினும் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கையில் பெயர் நீக்கப்பட்டதற்கு எதிராக தீர்ப்பாயத்தில் முறையீடு செய்தவர்களுக்கு அதில் இறுதி முடிவு எடுக்கப்படும் வரை நலத்திட்ட உதவி தொடரும். அதன் பின் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

மேற்கு வங்க உணவு வழங்கல் துறை அமைச்சர் அசோக் கீர்த்தனியா கூறுகையில்:-

“குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் கீழ் குடியுரிமை கோரி விண்ணப்பித்துள்ளவர்கள் அனைத்து அரசு திட்டங்களையும் பெறலாம். ரேஷன் அட்டைகள் சரிபார்க்கப்படும்” என்றார்.

இதுபோல் பிஹார் தலைநகர் பாட்னாவில், முதல்வர் சாம்ராட் சவுத்ரி கூறுகையில்:-

“பிஹாரில் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்கள், ரேஷன் பொருட்கள், பிற நலத்திட்டங்கள் உட்பட எந்தவொரு அரசு சலுகையையும் பெற முடியாது. இவர்களின் வங்கி பாஸ் புத்தகங்களும் உரிய காலத்தில் ரத்து செய்யப்படும்” என்றார்.

பிஹார் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அசோக் சவுத்ரி கூறுகையில்:-

“மாநிலத்தில் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைக்கு பிறகு, ரேஷன் அட்டைதாரர்களில் இருந்து சுமார் 5 லட்சம் பேர் நீக்கப்பட்டுள்ளனர்” என்றார்.

### த.வெ.க. ஆட்சியில் மயிலாடுதுறை,

# நாகை மாவட்டங்களில் கொலை, கொள்ளை!

## சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு!

நாகை, மே 15–

தமிழ்நாட்டில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில்நடிகர் விஜய் தலைமையிலான கட்சி 108 இடங்களில் வெற்றி பெற்ற நிலையில் திமுக கூட்டணி கட்சி ஆதரவின் பேரில் ஆட்சிக்கு வந்த முதல்வர் சோபா செட் விஜய் ஆட்சியில் தமிழ்நாட்டில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு நாளுக்கு, நாள் அதிகம் நடை பெற்று சட்டம் ஒழுங்கு சீரழிந்துள்ளது. நாகை மாவட்டம் நாகை அக்கரை பேட்டையைச் சேர்ந்த அருண்குமார் (40) என்பவர் நாகை ரயில்வே குட்செட் அருகே அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார் இது குறித்து நாகை நகர போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் நாகை புதிய பேருந்து நிலையம் அருகே பெண் அடித்து கொலை செய்யப்பட்டார்.

நாகை புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள டாஸ்மாக் கடை வாசலில் கீழ்வேளூரைச் சேர்ந்த சித்ரா (35) என்பவர் அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார். இது குறித்து வெளிப்பாளையம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர் ஒரே நாளில் நாகையில் இரண்டு பேர் கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சி ஏற்படுத்தியுள்ளது.

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையை அடுத்த மாப்ளை யைச் சேர்ந்த பள்ளி ஆசிரியை புஷ்பராதிகா (38) வீட்டில் இல்லாத நேரத்தில் வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்ற மர்ம நபர்கள் வீட்டிலிருந்து பீரோவை உடைத்து அதிலிருந்து ஆறு பவுன் நகை அரை கிலோ வெள்ளி கொள்ளையடித்து சென்றது தெரிய வந்தது. இதுகுறித்து மயிலாடுதுறை போலீசார் வழக்கு பதிவு விசாரித்து வருகின்றனர். மயி லாடுதுறை மாவட்டம் திருவிழந்தூரில் ஹாஜா சலாவுதீன் என்பவர் ஹோட்டல் நடத்தி வருகிறார் ஹோட்டலில் உணவு வாங்கிச் சென்று பின்னர் அது கெட்டு விட்டதாக கூறி ஹோட்டல் உரிமையாளர் மற்றும் ஹோட்டல் ஊழியர்களை தாக்கி ஹோட்டல் சூறையாடினர்.

இது குறித்து மயிலாடுதுறை போலீசார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

### அந்தமான் கடல் பகுதியில்

# தென்மேற்குப் பருவமழை: மே 16ம் தேதி தொடங்கும்!

சென்னை, மே 15 -

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தெற்கு வங்கக்கடலின் சில பகுதிகள், அந்தமான் கடல் பகுதிகள், அந்தமான் நிகோபார் தீவுப் பகுதிகளில் மே 16ம் தேதி வாக்கில் தென்மேற்குப் பருவமழை தொடங்க வாய்ப்பு உள்ளது.

இதற்கிடையே, தென் மேற்கு வங்கக்கடல், அதை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியால், டெல்டா, மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும், 15, 16ம் தேதிகளில் தென் தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

17ம் தேதி தென் தமிழகம், மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, 15ம் தேதி கோவை, நீலகிரி, 16ம் தேதி தேனி, 17ம் தேதி நீலகிரி, 18, 19ம் தேதிகளில் நீலகிரி, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் இடி, மின்னலுடன் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அமுல், மதர் டெய்ரி பால் விலை உயர்வு!

புதுடெல்லி, மே 15–

அமுல் நிறுவனம், அதன் பல்வேறு வகை பால்களின் விலையை நேற்று முதல் லிட்டருக்கு 2 ரூபாய் உயர்த்தியுள்ளது. 500 மிலி அமுல் தாஸா பால் பாக்கெட்டின் விலை 28 ரூபாயிலிருந்து 29 ரூபாயாக அதிகரிக்கும். அமுல் தாஸா 1 லிட்டர் பாலின் விலை 55 ரூபாயிலிருந்து 57 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அமுல் டீ ஸ்பெஷல் 1 லிட்டர் பாலின் விலை 63 ரூபாயிலிருந்து 66 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

எருமைப் பால் 500 மில்லி பாலின் விலை 37 ரூபாயிலிருந்து 39 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அமுல் கோல்ட் விலை 34 ரூபாயிலிருந்து 35 ரூபாயாக உயர்ந்தது. 500 மில்லி அமுல் சக்தி பாலின் விலை 34 ரூபாயிலிருந்து 35 ரூபாயாக உயரும். இதே போல் மதர் டெய்ரி நிறுவனமும் நேற்று முதல் பால்விலையை உயர்த்தி உள்ளது. எருமைப் பாலின் (1 லிட்டர்) விலை ரூ.75லிருந்து ரூ.80ஆக உயர்த்தப்பட்டுள்ளது. புல் கிரீம் பாலின் (1 லிட்டர்) விலை முன்பு ரூ.69 ஆக இருந்த நிலையில், தற்போது ரூ.72 ஆக உயர்த்தப்படுகிறது.

### மொழிப்போர் தியாகி

# எஸ்.எம்.சுந்தரராஜனின் மனைவி திருமதி எஸ்.ரூபாவதி மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே 15–

சென்னை மேற்கு மாவட்டம், மொழிப்போர் தியாகி எஸ்.எம்.சுந்தரராஜனின் மனைவியும், கழக வழக்கறிஞர் எம்.எஸ்.அரசகுமார், ரயில்வே எம்.எஸ். உதயகுமார், சென்னை மேற்கு மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் ஆக்கி எம்.எஸ்.சதீஷ் ஆகியோரின் அன்னையுமான திருமதி எஸ். ரூபாவதி, (வயது 86) அவர்கள் உடல்நலக்குறைவால் நேற்று முன்தினம் (13.05.2026) பிற்பகல் 2.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ.பாலு (எ) திராவிட பாலு

### மே 15 (2013)



இளமைக் காலம் முதற்கொண்டு திராவிட இயக்கத்தில் பற்று கொண்டு திருவள்ளூர் மாவட்டம், கன்னிகைப்பேர் கிளைச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும், இருமுறை எல்லாபுரம் ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும், மூன்று முறை கன்னிகைப்பேர் ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.


மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு மூன்றுமாத காலம் சிறைவாசம் அனுபவித்தவர். மேலும் கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புலவர் ஆடலரசு

### மே 15 (2007)



பொதுக்கூட்ட மேடைகளைப் பட்டிமன்றமாக – கவியரங்கமாக – வழக்காடு மன்றமாக மாற்றி பல்வேறு கோணங்களில் கழக கொள்கைகளை நாட்டு மக்கள் ஏற்கும் வண்ணம் நகரங்களிலும், குறிப்பாக கிராம.ப்புறங்களிலும் ஆற்றலோடு உரையாற்றியவர்.

கழகக் கொள்கைகளைப் பரப்பும் முகத்தான் “தியாகம்” எனும் தலைப்பில் நாடகம் இயற்றி தாமே அதில் நடித்தவர்.

கழகம் நடத்திய போராட்டத்தில் ஈடுபட்டு காவல்துறையால் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

1997ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும்விழாவில் தலைமைக் கழகச் சார்பில், தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு “கலைஞர் விருது” வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**